செ.வெ.எண்: 10/2021 நாள்: 06.11.2021

**திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா-2021 நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**

------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா-2021 நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.11.2021) ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது, இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் அருள்மிகு அருணாச்சலேசுவரர் தீருக்கோயில் தீபத்திருவிழா-2021 07-ந்தேதி தொடங்கி 23-ந் தேதி வரை நடைபெற உள்ளது. கோவிட்-19 தொற்று கட்டுப்படுத்தும் விதமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 5,000 பக்தர்கள் மட்டுமே இணையவழி மூலம் டிக்கெட் பதிவு செய்து சுவாமி தரிசனம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு 5000-த்திலிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

வெளியூர் பக்தர்கள் அனைவரும் சுவாமி தரிசனம் செய்திட திருக்கோயில் இணையதளம் www.arunachaleswarartemple.tnhrce.in இணையவழி மூலம் வாக்காளர் எண், ஆதார் எண்ணை, வாகன ஓட்டுநர் உரிமம் பயன்படுத்தி டிக்கெட் பதிவு செய்து தரிசனத்திற்கு வரும் போது அனுமதி சீட்டு எடுத்து வர வேண்டும்.

உள்ளூர் பக்தர்களுக்கு சிறப்பு சலுகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 3000 பக்தர்கள் நேரடியாக அனுமதி சீட்டு பெற்றுக்கொள்ளலாம். இந்த அனுமதி சீட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை நகராட்சி அலுவலகம், இணை ஆணையர் இந்து அறநிலையத்துறை அலுவலகம், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களில் அனுமதி சீட்டு ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் 05.00 வரை வழங்கப்படும். இந்த அனுமதி சீட்டு கட்டுப்பாடுகள் விதித்த நாட்கள் தவிர அனைத்து நாட்களிலும் இந்த அனுமதி சீட்டு பயன்படுத்திக்கொள்ளலாம்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுரர் திருக்கோவில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா-2021, 10.11.2021 புதன்கிழமை விடியற் காலை 06.00 மணி முதல் 09.00 மணி வரை கொடியேற்றம் நடைபெறுவதால் பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அனுமதி கிடையாது 09.00 முதல் 08.00 வரை பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 16.11.2021 செவ்வாய்கிழமை பஞ்சமூர்த்திகள் உற்சவம் தேரோட்டம் திருவிழா இந்த ஆண்டு கோவில் பிரகாரத்தில் உள்ளே நடைபெற உள்ளதால், காலை 06.00 மணி முதல் 09.00 மணி வரை கொடியேற்றம் நடைபெறுவதால் பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அனுமதி கிடையாது. திருவண்ணாமலை தீபத் திருவிழாவில் மலை மேல் ஏறுவதற்கு பக்தர்கள், பொது மக்களுக்கு அனுமதி கிடையாது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 25 இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் அருள்மிகு அருணாச்சலேசுவரர் தீபத்திருநாள் அன்று தரிசனம் செய்ய வருவார்கள். எனவே, கோவிட்-19 தொற்று ஏற்படாமல் இருக்க, பக்தர்களின் நன்மைக்காக 17-ந்தேதி 01.00 மணி முதல் 20-ந்தேதி வரை 3 நாட்களுக்கு பக்தர்களுக்கு கிரிவலம் செல்லவும் மற்றும் கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு சுவாமி தரிசனம் செய்ய அனுமதியில்லை. திருக்கோவில் வளாகம் மற்றும் கிரிவலப்பாதையில் அன்னதானம் செய்ய அனுமதி கிடையாது. சிறப்பு பேருந்துகள் மற்றும் சிறப்பு ரயில்கள் இந்த ஆண்டு அனுமதி கிடையாது என்றும், உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் அனைவரும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சுவாமி தரிசனம் செய்யுமாறும், திருவண்ணாமலையில் சுற்றியுள்ள தங்கும் லாட்ஜ்கள், ஹோட்டல்கள், ஆசிரமங்கள், மண்டபங்களில் 3-5 நாட்கள் மொத்தமாக முன் பதிவு செய்வதற்கு அனுமதி கிடையாது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருக்கார்த்திகை தீபத் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து குடிநீர் உட்பட அனைத்து அடிப்படை வசதிகள் மேற்கொள்வது, சுகாதாரத் துறை மருத்துவக் குழு, நடமாடும் மருத்துவ வாளாகம், காவல் துறை பாதுகாப்பு, சுகாதாரப் பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்வது, உட்பட அனைத்து அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்வது குறித்து ஆய்வு செய்தார். தற்காலிக பேருந்து நிலையம் 10.11.2021 முதல் 23.11.2021 தீபம் முடியும் வரை ஈசான்யம், செங்கம் ரோடு, காஞ்சி ரோடு, திருக்கோவில் ரோடு ஆகிய 4 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

திருக்காத்திகை தீபத்திருவிழாவிற்கு வரும் பக்தர்கள் அனைவரும் கொரோனா முதல் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள், அல்லது 24 மணிநேரத்திற்கு முன்னதாக RTPCR பரிசோதனை செய்து, பரிசோதனை சீட்டு கொண்டுவரும் பக்தர்களுக்கு மட்டுமே தீபத்திருவிழாவில் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். திருவண்ணாமலை மாவட்டம் கோவிட்-19 தொற்று நெறிமுறைகளை கடைபிடித்து அனைவரும் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்து இந்த ஆண்டு திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை கொண்டாட வேண்டுமென்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பவன் குமார் ரெட்டி இ.கா.ப., திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோவில் இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு.அசோக்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.மு.பிரதாப் இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் திரு.முரளி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.கட்டா ரவி தேஜா இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் (திருவண்ணாமலை) திரு.வெற்றிவேல், மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**